2

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092377

1. District : மாவட்டம் நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 10/AC/2019 Date: நாள் 16.07.2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a) and 7A
   (ii) Act சட்டம்: by the Prevention of Corruption Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15-07-2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period நேர அளவு மாலை 18-00 மணிக்கு மேல் Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16-07-2019 Time நேரம் : மாலை 15-00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II 16-07-2019 Time நேரம் : மாலை 15.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய்மொழியாக~~ திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3. கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 2-ஆம் இணை சார் பதிவாளர் அலுவலகம், நாமக்கல்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.T. ஜெய்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அ. தியாகராஜன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05-06-73 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91-ன் மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் அடக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப் படுகிறது :-

விபரம் தனித்தாளில் இணைக்கப் பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. M. Nallammal, Inspector of Police, to take up the investigation / Refused investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உருப்படி பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...................................................காவல் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 16/07/19

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

16-07-2019 at 17.00 மணிக்கு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 16/07/19

Name: பெயர் A.T. ஜெயக்குமார்.
Rank: நிலை ...................... No. எண் ..........
காவல் துறை கண்காணிப்பாளர்.
ஊ.த.க. பிரிவு, நாமக்கல்.

**<u>நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.10/AC/2019, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் வரிசை எண். 7 இன் தொடர்ச்சி</u>**

<u>எதிரிகளின் பட்டியல்</u>

1) திரு.S.சுந்தரவடிவேல், 2-எண், இணை சார்பதிவாளர், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல்.

2) திரு.M.மணிவாசகம், அலுவலக உதவியாளர், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல்.

3) திரு.V.தமிழ்செல்வன், IP கேமரா ஆப்ரேட்டர், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல்.

4) திரு.M.பாபு, த/பெ.முத்துசாமி, கதவு எண்.2/36 அருந்ததியர் தெரு, நருவலூர், தளிகை(அஞ்சல்), நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம். (தனியர்/இடைத்தரகர்).

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.10/AC/2019, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

\- - -

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 15.07.2019-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை சுமார் 18.00 மணி முதல் இரவு 23.30 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் டவுன், நாமக்கல் To மோகனூர் செல்லும் தென்வடல் சாலையிலிருந்து சுமார் 100 அடி கிழக்கு பக்கம் உள்ள சார்நிலைக் கருவூலத்திற்கு அடுத்து இயங்கிவரும் 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 16.07.2019-ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.10/AC/2019, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-இன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில், 2-எண் இணை சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பத்திரபதிவு, வில்லங்க சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் 15.07.2019-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திடீர் தணிக்கை மேற்கொள்ள அரசு சாட்சிகளாக விசாரணைக்கு உதவியாக இருக்க அவர்களின் உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, அரசு சாட்சிகள் 1) திரு.N.சுதாகர், செயல் அலுவலர், அருள்மிகு அரப்பளீஸ்வரர் சுவாமி திருக்கோயில், கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் மற்றும் 2) திரு.B.பன்னீர் செல்வம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம் ஆகிய இருவரையும் நாமக்கல் பேருந்து நிலையத்தில் வந்து காத்திருக்குமாறு தொலைபேசியில் அறிவுறுத்திய பின்னர் 15.07.2019-ம் தேதி மாலை சுமார் 17.40 மணிக்கு நான் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு நாமக்கல் பேருந்து

நிலையத்திற்கு மாலை சுமார் 17.50 மணிக்கு சென்று சேர்ந்தேன். அங்கு காத்திருந்த மேற்படி அரசு சாட்சிகளை நான் அரசு வாகனத்தில் அழைத்துக் கொண்டு 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 18.00 மணிக்கு சென்று சேர்ந்தேன். நாமக்கல் To மோகனூர் செல்லும் தென்வடல் சாலையிலிருந்து சுமார் 100 அடி கிழக்கு பக்கம் உள்ள சார்நிலைக் கருவூலத்திற்கு அடுத்து வடக்கே உள்ள 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்தபோது மத்திய அறையில் மேற்கு நோக்கி சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் நான் என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டேன். பின்பு நான் அவரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.ச.சுந்தரவடிவேல் என்றும், சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். நான் சார்பதிவாளரிடம் குழுவினருடன் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன்பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன்.

அப்போது 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.S.இராதா, உதவியாளர் திருமதி.S.சுகந்தி, உதவியாளர் திரு.P.லோகநாதன், இளநிலை உதவியாளர் திரு.A.ஹரிஹரன், இளநிலை உதவியாளர் திரு.P.தங்கபாண்டி, டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி.M.சித்ரா, IP கேமரா ஆப்ரேட்டர் திரு.V.தமிழ்செல்வன், அலுவலக உதவியாளர் திரு.M.மணிவாசகம், அலுவலக உதவியாளர் திரு.R.பெரியசாமி ஆகிய அலுவலர்கள் அலுவலகத்தில் பணியில் இருந்தனர். அப்போது பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்கள் சிலரும் அலுவலகத்திற்குள் இருந்தனர். பொதுமக்களிடம் விசாரணை செய்தபோது அவர்கள் இன்று பத்திரப் பதிவிற்காக முன்பதிவு செய்துள்ளதாகவும், அதற்காக அலுவலகம் வந்துள்ளதாகவும் தெரிவித்தனர். அனைத்து அலுவலர்களையும் கணினி அறைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. பொதுமக்களை மத்திய அறையில் இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. பின்னர் நான் அரசு சாட்சிகள் உதவியுடன் சார்பதிவாளரின் இருக்கை முழுவதையும் தணிக்கை செய்தேன். அப்போது சார்பதிவாளரிடம் இன்றைய தினம் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை விபரங்கள்

குறித்துக் கேட்டேன். அதற்கு அவர் இன்றைய தினம் மாலை 18.00 மணிவரை மொத்தம் 36 ஆவணங்கள் எண்கள் 1/2540/2019 முதல் 1/2575/2019 வரை பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்காக A-கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.10,01,095/-ம், Point of Service (POS) தொகையாக ரூ.635/-ம் வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேலும் D-கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.17,230/-ம், POS தொகையாக ரூ.275/-ம் ஆக மொத்தம் ரூ.17,505/- வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேற்படி தொகைகளுக்கு உண்டான இன்றைய தினம் போடப்பட்ட இரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் சரியாக இருந்தன. மேலும் நிரந்தர முன்பணம் பையை சோதனை செய்து பார்க்கையில் ரூ.250/- இருந்தது. அதை ரொக்க கணக்கு பதிவேடு மற்றும் நிரந்தர முன்பணம் பதிவேட்டு பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க ரூ.250/- சரியாக இருந்தது. மேற்படி பணம் சார்பதிவாளரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அந்த திடீர் தணிக்கையின்போது கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

1) 'A' கணக்கு பதிவேடு தொகுதி எண்-230 பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் பக்கம் 100-ல் இன்றைய தினம் 15.07.2019-ம்தேதி பதிவு செய்யப்பட்ட ஆவண எண்கள்.2540 முதல் 2576 வரை பதிவுகள் உள்ளது.(பக்கம்-1 முதல் 202 வரை)
2) 'B' கணக்கு பதிவேடு தொகுதி எண்.32 பார்வையிடப்பட்டதில் பக்கம் 198-ல் 15.07.2019-ஆம் தேதி ஆவண பாதுகாப்பு கட்டணம் ரூ.4/- வசூல் செய்யப்பட்டதற்கான கடைசி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பக்கம்-1 முதல் 200 வரை)
3) 'C' கணக்கு பதிவேடு தொகுதி எண்-26 பார்வையிடப்பட்டதில் பக்கம்-229-ல் 15.07.2019 என்று தேதியிடப்பட்டு முன் இருப்பு என்று தொகை எதுவும் குறிப்பிடாமல் பதிவுகள் உள்ளது.
4) 'D' கணக்கு கணினியில் பார்வையிடப்பட்டதில் இன்று 15.07.2019-ம் தேதி கடைசியாக தனித்தேடுதல் எண்.ECA/17199366/2019-ல் வில்லங்க சான்றுக்காக ரூ.451/- பெற்றமைக்கு கடைசி பதிவுகள் உள்ளது. அந்தப் பக்கத்திற்கான அச்சு நகல் எடுக்கப்பட்டு 2 எண். இணை சார்பதிவாளரிடம் கையொப்பம் பெறப்பட்டது (2 தாள்கள்).

5) ‘G’ பதிவேடு தொகுதி எண்.49 பார்வையிடப்பட்டது. கடைசியாக 15.07.2019-ஆம் தேதி ஆவணங்கள் பதிவுகள் செய்யப்பட்டதற்கான எண்ணிக்கைகள் சரியாக உள்ளது.

6) ‘H’ கணக்கு தொகுதி எண்-40 பதிவேடு பார்வையிடப்பட்டது. கடைசியாக பக்கம்-42ல் 15.07.2019-ஆம் தேதி அனைத்து கணக்கு தலைப்பிலான தொகைகள் பதிவுகள் செய்யப்பட்டதற்கான பதிவுகள் சரியாக உள்ளது.

7) ரொக்க கணக்கு பதிவேடு தொகுதி எண்-10 பார்வையிடப்பட்டது. கடைசியாக பக்கம்-42ல் 15.07.2019-ஆம் தேதி அனைத்து கணக்கு தலைப்பிலான தொகைகள் நிரந்தர முண்பணம் ரூ.250/-, POS தொகை ரூ.2,637/- மற்றும் இணைய வழி தொகை ரூ.12,86,500/- வசூல் செய்யப்பட்ட பதிவுகள் செய்யப்பட்டதற்கான பதிவுகள் சரியாக உள்ளது.

8) இந்து திருமண கட்டணப் பதிவேடு தொகுதி எண்.11 பார்வையிடப்பட்டது. பக்கம்-223ல் கடைசியாக 15.07.2019-ஆம் தேதி இந்து திருமணம் பதிவு செய்யப்பட்டதற்கான கூடுதல் தொகை ரூ.255/- வசூல் செய்யப்பட்டதற்கான தொகை சரியாக உள்ளது.

9) தமிழ்நாடு திருமண கட்டணப் பதிவேடு தொகுதி எண்.4 பார்வையிடப்பட்டது. பக்கம்-32ல் கடைசியாக 15.07.2019-ஆம் தேதி தமிழ்நாடு திருமணப் பதிவு செய்யப்பட்டதற்கான கூடுதல் தொகை ரூ.270/- வசூல் செய்யப்பட்டதற்கான பதிவுகள் சரியாக உள்ளது.

10) இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு-41ன் கீழ் வசூல் குறித்த பதிவேடு தொகுதி எண்.27 பார்வையிடப்பட்டது. பக்கம்-92ல் கடைசியாக 15.07.2019-ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட முத்திரைத் தீர்வை கூடுதல் தொகை ரூ.2,64,020/- வசூல் செய்யப்பட்டதற்கான பதிவுகள் சரியாக உள்ளது.

11) 2019 தனிநபர் பணம் இருப்பு பதிவேடு தொகுதி எண்.9 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-106ல் 15.07.2019-ம் தேதி கடைசி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

12) நாமக்கல் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு-2019 தொகுதி எண்.112 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-15-ல் 2019-ஜுலை மாதத்திய வருகை பக்கத்தில் சார்பதிவாளர் திரு.சுந்தரவடிவேல் மற்றும் இதர அலுவலர்கள் இன்றைய தினம் சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர்.

13) தன்பதிவேடு தொகுதி எண்.129 பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் கடைசியாக பக்கம்-191-ல் வரிசை எண்.354-ல் நடப்பு எண்.387 என்று குறிப்பிட்டு, இறுதியாக 15.07.2019-ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

14) TCS OPERATORS வருகைப் பதிவேடு-2019 தொகுதி எண்.2 பார்வையிடப்பட்டது. அதில் 2019-ஜுலை மாதத்திய வருகை பக்கத்தில் திருமதி.மு.சித்ரா மற்றும் திரு.வா.தமிழ்செல்வன் ஆகியோர் இன்றைய தினம் சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர்.

15) நிரந்தர முன்பணப் பதிவேடு தொகுதி எண்.5 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-60ல் கடைசியாக 15.07.2019-ஆம் தேதி முன் இருப்புத் தொகை ரூ.250/- இருப்பில் உள்ள வரவு செலவு பதிவுகள் உள்ளது.

மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் (D கணக்கு தலைப்புத் தவிர) நானும், அரசு சாட்சிகளும் சுருக்கொப்பம் செய்தோம். அதன் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு, சார்பதிவாளர் திரு.சுந்தரவடிவேல் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டபோது, மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) நாமக்கல் அவர்களின் ந.க.எண்.8475/இ/2018, நாள்.01.02.2019-ன்படி, எனக்கு 2019-ஆண்டு கொடிநாள் நிதி வசூல் ரூ.70,000/- இலக்கு நிர்ணயித்து, அதன்படி கடந்த 21.03.2019-ஆம் தேதி வரை வசூலிக்கப்பட்ட ரூ.70,000/-ஐ (அடிக்கட்டைகள் எண்.5700001 முதல் 5700700 வரை) மாவட்ட பதிவாளர், நாமக்கல் அவர்களுக்கு 6 தவணைகளாக சார்பதிவாளர் அலுவலக ந.க.எண்.56/2019, நாள்.21.03.2019 கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தற்போது கொடிநாள் நிதி வசூல் இலக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்தார். மேற்படி மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) நாமக்கல் அவர்களின் படைவீரர் கொடிநாள்-2018 வசூல் இலக்கு சார்பதிவகங்கள் வாரியாக நிர்ணயிக்கப்பட்ட கடிதமும், சார்பதிவாளர் அவர்களின் கடிதமும் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு, சார்பதிவாளர் திரு.சுந்தரவடிவேல் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் நடவடிக்கைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர், 2 எண் இணை சார்பதிவாளரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் சார்பதிவாளர்

திரு.சுந்தரவடிவேல் அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.500/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை அலுவலர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு பதிவேட்டிலேயே வைத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் சார்பதிவாளரின் இருக்கையின் எதிரே உள்ள அலுவலர்களின் இருக்கைகள் முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் நான் சார்பதிவாளரிடம் மீதமுள்ள ஆவணங்களை பதிவுகள் மேற்கொள்ளுமாறு கூறினார். சார்பதிவாளர் பதிவுகள் முடித்த பின்னர் அவரை உடன் அழைத்துக் கொண்டு பதிவு வைப்பறைக்கு சென்று அறை முழுவதும் சந்தேகத்தின் பேரில் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அலுவலகத்தின் வடமேற்கு பக்கம் கண்ணாடியால் தடுக்கப்பட்டிருந்த கணினி அறைக்கு சென்று அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.P.லோகநாதன் என்பவரை சோதனை செய்து விசாரிக்க அவர் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் ரூ.590/- தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்து அத்தொகையை சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் திருமதி.சுகந்தி அப்பணத்தை வாங்கி காக்கிநிற கவரில் வைத்துக் கொண்டார் என்று சொன்னார். பின்னர் உதவியாளர் திருமதி.S.இராதா என்பவரை சோதனை செய்து விசாரிக்க அவர் கைச்செலவிற்காக எந்த பணமும் கொண்டு வரவில்லை என்றும், தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்துள்ளதாக சொன்னார். அவரது கைப்பையில் சோதனை செய்ததில் அதில் பணம் ஏதும் இல்லை. பின்னர் உதவியாளர் திருமதி.S.சுகந்தி என்பவரை சோதனை செய்து விசாரிக்க அவர் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் ரூ.590/- தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்து அத்தொகையை சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி நான் அப்பணத்தை காக்கிநிற கவரில் வைத்துக் கொண்டேன் என்றும், மற்றும் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களின் கைச்செலவிற்காக கொண்டுவரும் பணத்தை சார்பதிவாளார் சுந்தரவடிவேல் அவர்களின் உத்தரவுப்படி காலையில் அலுவலகம் வந்தவுடன் அனைத்து அலுவலர்களிடமிருந்து சேகரித்து காக்கிநிற கவரில் வைத்து அவரிடமே கொடுத்துவிடுவேன் என்று சொன்னார்.

அவரது கைப்பையில் சோதனை செய்ததில் அதில் பணம் ஏதும் இல்லை. பின்னர் இளநிலை உதவியாளர் திரு.A.ஹரிஹரன் என்பவரை சோதனை செய்து விசாரிக்க அவர் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் ரூ.200/- தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்து அத்தொகையை சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் திருமதி.சுகந்தி அப்பணத்தை வாங்கி காக்கிநிற கவரில் வைத்துக் கொண்டார் என்று சொன்னார். பின்னர் இளநிலை உதவியாளர் திரு.P.தங்கபாண்டி என்பவரை சோதனை செய்து விசாரிக்க, அவர் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் ரூ.80/- தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்து அத்தொகையை சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் திருமதி.சுகந்தி அப்பணத்தை வாங்கி காக்கிநிற கவரில் வைத்துக் கொண்டார் என்று சொன்னார். பின்னர் அலுவலக உதவியாளர் திரு.R.பெரியசாமி என்பவரை சோதனை செய்து விசாரிக்க, அவர் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் ரூ.200/- தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்து அத்தொகையை சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் திருமதி.சுகந்தி அப்பணத்தை வாங்கி காக்கிநிற கவரில் வைத்துக் கொண்டார் என்று சொன்னார். பின்னர் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி.M.சித்ரா என்பவரை சோதனை செய்து விசாரிக்க, அவர் கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் ரூ.250/- தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவிட்டு அதில் கையொப்பம் செய்து அத்தொகையை சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் திருமதி.சுகந்தி அப்பணத்தை வாங்கி காக்கிநிற கவரில் வைத்துக் கொண்டார் என்று சொன்னார். மேற்படி தொகைகள் பற்றிய விபரம் அலுவலர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டுடனும், கவரில் இருந்த பணத்துடனும் ஒப்பிடுகையில் அவர்கள் கூறிய தொகைகள் சரியாக ஒத்திருந்தது. மேற்படி தொகைகள் சார்பதிவாளர் அவர்களிடம் திரும்ப வழங்கப்பட்டது. அந்த கணினி அறையின் வடமேற்கு பக்கம் உள்ள உதவியாளர் லோகநாதன் அவர்களின் கணினி மேஜையின் முன்பு நின்று இருந்த அலுவலக உதவியாளர் திரு.M.மணிவாசகம் என்பவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை, அவர் தனது அலுவலக டேபிளின் மீது வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.780/- (Rs.500x1, 100x1, 50x2, 20x2, 10x4) இருந்தது, அவரிடம் விசாரித்ததில் இன்று அலுவலகம் வரும்போது

ரூ.100/- செலவுக்கு கொண்டு வந்ததாகவும், அதை அலுவலர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து, சுருக்கொப்பமிட்டு, சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் சுகந்தி அவர்கள் வசம் கொடுத்து விட்டதாகவும், மேற்படி பணம் ரூ.780/- அலுவலகத்தில் ஆவணப்பதிவு செய்ய வந்தவர்களிடம் வாங்கியதாகவும் தெரிவித்தார். அதனால் மேற்படி பணம் ரூ.780/- அரசு சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் கணினி அறையின் தென்மேற்கு பக்கம் உள்ள கணினி மேஜையின் முன்னர் நின்று கொண்டிருந்த கேமரா ஆப்ரேட்டர் திரு.V.தமிழ்செல்வன் என்பவரை சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடது மேல்பக்க வெளிப்பாக்கெட்டில் கத்தையாக பணம் வைத்திருந்தார். அதை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.690/- (Rs.500x1, 100x1, 50x1, 20x2) இருந்தது, அவரிடம் விசாரித்ததில் இன்று அலுவலகம் வரும்போது ரூ.100/- செலவுக்கு கொண்டு வந்ததாகவும், அதை அலுவலர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து, சுருக்கொப்பமிட்டு, சார்பதிவாளர் சுந்தரவடிவேல் உத்தரவுப்படி உதவியாளர் சுகந்தி அவர்கள் வசம் கொடுத்துவிட்டதாகவும், மேற்படி பணம் ரூ.690/- அலுவலகத்தில் ஆவணப்பதிவு செய்ய வந்தவர்களிடம் வாங்கியதாகவும் தெரிவித்தார். அதனால் மேற்படி பணம் ரூ.690/- அரசு சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் கணினி அறை முழுவதும் சோதனையிடப்பட்டது, அவ்வறையில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் சார்பதிவாளர் இருக்கையின் எதிரே பொதுமக்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு செல்லப்பட்டது. அங்கு இருந்த பொதுமக்களில் ஒவ்வொருவராக விசாரித்தபோது, அதில் ஒருவர் தனது பெயர் M.பாபு, த/பெ.முத்துசாமி, நருவலூர் என்றும், தான் நாமக்கல் அட்வகேட் ஸ்ரீதர் என்பவரிடம் அசிஸ்டெண்டாக வேலை செய்வதாகவும், நாமக்கல் டவுன், பொய்யேரிக்கரையைச் சேர்ந்த செந்தில் என்பவரின் பத்திர பதிவு சம்மந்தமாக அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனையிட்டதில், அவரின் வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.15,000/- (Rs.2,000 x 7, Rs.500 x 2) இருந்தது. மேலும் அவரை சோதனையிட்டதில், அவரின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார்.

அப்பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.25,000/- (Rs.500 x 50) இருந்தது. அத்தொகைகள் பற்றி அவரிடம் கேட்க, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும்விதம் இருந்ததாலும் மேற்படி மொத்த தொகை ரூ.40,000/- அரசு சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. அதில் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் T.சம்பத், த/பெ.சங்கரலிங்கம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை என்றும், தான் தனது மனைவி திருமதி.கண்ணாமணி பெயரில் உள்ள நிலத்தை நாமக்கல் நடராஜபுரத்தைச் சேர்ந்த சசிக்குமார் என்பவருக்கு பத்திர பதிவு செய்து கொடுக்கும் வேலையாக அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனையிட்டதில், அவரின் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் மணிபர்சில் வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.4,240/- (Rs.2000 x 1, Rs.500 x 4, 100x1, 20x3, 10x8) இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அவர் சொந்த செலவிற்காக சென்னையிலிருந்து கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.4,240/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. அந்த அறையில் இருந்த மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் V.கேசவமூர்த்தி, த/பெ.வேலுச்சாமி, இந்திரா நகர், என்.கொசவம்பட்டி, நாமக்கல் என்றும், தான் தனது அண்ணன் முருகேசன் மனைவி விஜயா என்பவர் சேகர் என்பவரிடம் வீடு வாங்கியுள்ளதால் அவரது பத்திர பதிவிற்கு சாட்சி கையெழுத்து போட அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனையிட்டதில், அவரின் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.12,710/- (Rs.500 x 18, 200x5, 100x26, 50x2, 10x1) இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அவர் தான் பெயிண்டிங் தொழில் செய்து வருவதாகவும், நாமக்கல்லில் பெயிண்ட் வாங்கிச் செல்ல கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.12,710/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. அங்கிருந்த மற்றொருவரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் S.செந்தில், த/பெ.செல்லப்பன், பொய்யேரிக்கரை, நாமக்கல் என்றும், தான் தனது அப்பா செல்லப்பன் என்பவரது பெயரில் உள்ள நிலத்தை தானும், தனது

தங்கையும் பாகக்கறார் செய்து கொள்ள அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனையிட்டதில், அவரின் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று எண்ணிப்பார்க்க ரூ.40,750/- (Rs.2,000 x 17, 500 x 12, 200x2, 100x3, 50x1) இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அவர் தனது அப்பாவிற்கு செலவிற்கு கொடுக்க கரூர் வைஸ்யா பேங்க் ATM-ல் எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.40,750/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. திடீர் தணிக்கை 15.07.2019-ம் தேதி இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் என்னால் பதிவு செய்யப்பட்டது.

திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் தனியர்/இடைத்தரகர் ஆகியோர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் இடைத்தரகர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற முறையில் அலுவலர்களால் அவர்களிடமிருந்து பிரதிபலானாக பெறப்பட்ட பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், தனியர்/இடைத்தரகர் முறையற்ற விதத்தில் சார்பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்கள் அவர்களது அலுவல் பணியில் தனியர்/இடைத்தரகருக்கு பிரதிபலனாகவோ, சட்ட விரோதமான வழிகளிலோ பணி செய்வதற்கு அவர்களைத் தூண்டுவதற்கு அலுவலகத்திற்கு கையூட்டு பணத்துடன் வந்து இருக்கக் கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்தரவு பெற்று, எதிரிகள் 1) திரு.S.சுந்தரவடிவேல், 2-எண் இணை சார்பதிவாளர், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல், 2) திரு.M.மணிவாசகம், அலுவலக

உதவியாளர், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல், 3)திரு.V.தமிழ்செல்வன், IP கேமரா ஆப்ரேட்டர், 2-எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல் மற்றும் 4) திரு.M.பாபு, த/பெ.முத்துசாமி, கதவு எண்.2/36 அருந்ததியர் தெரு, நருவலூர், தளிகை(அஞ்சல்), நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம் (தனியர்/இடைத்தரகர்) ஆகியோர்கள் மீது இன்று 16.07.2019-ம் தேதி மாலை 15.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.10/AC/2019, u/s. 7(a) and 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழக்கில் புலன் விசாரணையை மேற்கொள்ள நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.எம்.நல்லம்மாள் அவர்களுக்கு பணிக்கப்பட்டது.

16/07/19

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.